සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: வரலாறு -I – HISTORY -I | காலம் : 1மணித்தியாலம் |

**கவனத்திற் கொள்க.**

- **சகல வினாக்களுக்கும் விடையளிக்க. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **இலக்கம் 01 -40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1),(2),(3),(4) விடைகளிலிருந்து மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில், ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள விடை இலக்கின் மீது புள்ளடி (×) இடுக.**

(01) மகாவம்சத்தின் முதல் பகுதி எம்மொழியில் எழுதப்பட்டுள்ளது?
(1) சிங்களம் (2) பாளி (3) சமஸ்கிருதம் (4) மாகதி

(02) கோட்டை யுகத்தில் எழுதப்பட்ட பெரகும்பா சிரித்த எனும் நூல்,
(1) ஒரு சந்தேச காவியமாகும். (2) ஒரு போர் காவியமாகும்.
(3) ஒரு புகழ் காவியமாகும். (4) ஒரு சீலா காவியமாகும்.

(03) அதி வரள் வலயத்திற்குரிய, வரலாற்றுக்கு முற்பட்டகால தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம்,
(1) பாகியன்கல (2) ராவணாஎல்ல (3) புந்தல (4) மானியம்கம

(04) வெள்ளத்தை கட்டுப்புடுத்தும் தொழில்னுட்பம் அறியாத முன் வரலாற்று காலத்தில் மக்கள் தமது குடியேற்றங்களை எங்கு அமைத்தனர்?
(1) நதிக்கரைகளிலிருந்து சிறிது தொலைவில். (2) மலைநாடுகளில்
(3) நதிக்கரை ஓரங்களில். (4) நதியின் ஆரம்ப ஊற்றுகளுக்கருகில்.

(05) துட்டகைமுனு மன்னன் பரமகமாரது உதவியை எதற்கு பெற்றுக் கொண்டார்?
(1) மத்தியஸ்தப்படுத்தப்பட்ட அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கு.
(2) பரவிக் கிடக்கும் அதிகாரத்தை ஒன்றிணைப்பதற்கு.
(3) பிரதேச நிர்வாகத்தை ஒழுங்கமைப்பதற்கு
(4) நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு.

(06) கல்வெட்டுக்களில் கெதிஅட, கெட்டுகனப என்பதனால் குறிப்புடுவது,
(1) சேனைகளிலிருந்து அறவிடப்பட்ட வரிகள்.
(2) தானியம் அளக்கும்போது பயன்படுத்தம் அளவை முறை
(3) விவசாயத்திற்கு பயன்படுத்திய உபகரணம்.
(4) சிலகாலம் கைவிடப்பட்டு, பின் மீண்டும் பயிர்செய்யப்பட்ட சேனை.

- **பின்வரும் அட்டவணையில் A – H வரை தரப்பட்டுள்ள தகவல்களை அவதானித்து (07)ம், (08)ம் இலக்க வினாக்களுக்கு விடையளிக்க.**

| இராசதானி யுகம் | தொடர்பு | தொடர்புடைய நாடு |
|---|---|---|
| A- அநுராதபுரம் | C- பத்தினி தேவால திறப்பு விழாவிற்கு செல்லல் | F- உரோம் தேசம் |
| B- பொலனறுவை | D- ருவன்வெலிசாயவை அலங்கரிப்பதற்கு கண்ணாடி முத்துக்களை கொணர்தல். | G – சேர இராச்சியம் |
| | E- வேளைக்கார படையினரை தளதா மாளிகையை பாதுகாக்க நியமித்தல். | H- தென்னிந்தியா |

(07) பாதிகாபய மன்னன் தொடர்பிலான தகவல்கள் மட்டும் அடங்கிய விடை,
(1) BDE (2) ADF (3) EGH (4) BDF

(08) முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய விடை,
(1) BDF (2) ADG (3) ACG (4) BEH

(09) புராதன காலத்தில் இலங்கை மக்கள் உணவுக்காக உற்பத்தி செய்த பயிர்களுக்கு மாறாக தேசிய தேவைக்காக பயிரிட்ட பயிர் ஒன்று,
(1) கறுவா (2) பாக்கு (3) பருத்தி (4) புகையிலை

(10) பின்வரும் ‘அ’,’ஆ’ நிரல்களில் உள்ள தகவல்களை முறையாக இணைத்தால் வரும் விடை,

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. முதலாம் உபதிஸ்ஸ மன்னன் | A- வைத்தியசாலைகளுக்கு வளங்களை பெற்றுக்கொடுத்தல். |
| 2. புத்ததாச மன்னன் | B- பசவத்திநாமசாலாவை அமைத்தல். |
| 3. ஐந்தாம் மகிந்த மன்னன் | C- காய்ச்சல் நோய்க்கு வைத்தியசாலை அமைத்தல். |
| 4. நான்காம் காசியப்ப மன்னன் | D- வைத்தியசாலைகள் அமைத்தல். |

(1) ABCD (2) BDAC (3) BCAD (4) DBCA

(11)
- செயற்கையான கற்பாறைகளுடன் குளக்கட்டை இணைத்திருத்தல்.
- குளக்கட்டின் நீளம் சுமார் ஏழு மைல்களாக இருத்தல்.
- உயரம் சுமார் நாற்பத்து நான்கு அடிகளாக இருத்தல்.
- அதிவரள் வலயத்தில் காணப்படுதல்.

மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய நீர்ப்பாசணத்திட்டம்,

(1) யோதவாவி (2) கலாவாவி (3) மின்னேரியா வாவி (4) பதவியா குளம்

(12) ஆலாஹன பிரிவெனா வளவில் அகழ்வாராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களுள் பின்வருவனவற்றுள் பிழையான தகவல் எது?
(1) கட்டடத்தின் அளவிற்கு ஏற்ப மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருந்தமை.
(2) சிக்கலான அறுவைசிகிச்சைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் காணப்பட்டமை.
(3) கழிவகற்றல் முறை சூழலுக்கு அழிவை ஏற்படுத்தாத வகையில் அமைக்கப்பட்டிந்தமை.
(4) கண் மருத்துவ முறைகளும் நடைபெற்றமைக்கான தகவல்கள் கிடைத்தமை.

(13) பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய சமூக அமைப்பின் செயற்பாட்டின் விளைவு,

(1) விவசாயத்துறை வளர்ச்சியடைந்தமை. (2) திட்டமிடப்பட்ட நகரங்கள் தோன்றியமை.
(3) மாற்று உற்பத்திகள் ஏற்பட்டமை. (4) மக்கள் பல இடங்களுக்கு குடியேறியமை.

(14) பின்வரும் வரலாற்று சம்பவங்களை காலத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினால் வரும் விடை,

A- தளதா பூஜாவலிய எழுதப்பட்டமை.

B- காலியில் மும்மொழி கல்வெட்டு அமைத்தமை.

C- சிங்கள சங்கய எனும் கிளர்ச்சி ஏற்பட்டமை.

D- பெலிகலயில் தளதா மாளிகை அமைத்தமை.

(1) ACDB (2) DABC (3) BADC (4) CBAD

(15) கோட்டை தர்மபால மன்னனின் தந்தையான வீதிய பண்டார போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டமைக்கான காரணம்,

(1) போர்த்துக்கேயர் பலந்த கோட்டையை ஆக்கிரமித்தமை.
(2) புவனேகபாகு மன்னனை கொல்வதற்கு போர்த்துகேயர் ஆயத்தமாகியமை.
(3) போர்த்துக்கேயர் கோட்டை அரண்மனையை கொள்ளையடித்தமை.
(4) தர்மபால இளவரசனை போர்த்துக்கேயர் தமது கைப்பாவையாக்கியமை.

(16) சீதாவக்கை நிர்வாகிகள் போர்த்துக்கேயருடன் போரிட்டு தோற்றமைக்கு ஏதுவான மிகப் பிரதான காரணி,

(1) போர்களின்போது சீதாவக்கை படைகள் போர்த்துக்கேயருடன் இணைந்தமை.
(2) சீதாவக்கை ஆட்சியாளரிடையே காணப்பட்ட அதிகார போராட்டம்.
(3) சீதாவக்கைக்கு போதியளவு கப்பற்படையினர் இல்லாதிருந்தமை.
(4) கோட்டை மக்களுக்கு சீதாவக்கை ஆட்சியாளன் மீது நல்லபிராயம் இன்மை.

- **பின்வரும் தகவல்களை அடிப்படையாக்க் கொண்டு (17)ம் (18)ம் வினாக்களுக்கு விடையளிக்க.**

A- தெல்கமு விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த புனித.தந்த தாது கண்டிக்கு கொண்டு வரப்பட்டமை.

B- வெலிவட்ட சரணங்கர தேரருக்கு சங்சராஜ பதவி அளிக்கப்பட்டது.

C- போர்த்துக்கேயர் இந்நாட்டிலிருந்து வெளியேறுதல்.

D- சீயம் தேசத்திலிருந்து உபசம்பதாவை கொணர்தல்.

E- கன்னொருவை போரில் போர்த்துக்கேயரை படுதோல்வியடையச்செய்தமை.

(17) இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் தொடர்புடைய தகவல்கள் மட்டும் அடங்கிய விடை,

(1) D யும் E யும் (2) C யும் D யும் (3) A யும் B யும் (4) C யும் E யும்

(18) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய விடை,

(1) B யும் D யும் (2) C யும் D யும் (3) B யும் A யும் (4) A யும் C யும்

(19) கண்டி இராசதானியின் ஆரம்பத்தில் சுயாதீன அமைப்பாக காணப்பட்டு பின்னர் திசாவையின் கீழ் செயற்படும் நிர்வாக அமைப்பாக மாறிய அமைப்பு எது?

(1) வரி அமைப்பு (2) ரட்ட வசம அமைப்பு
(3) மகாவாசல அமைப்பு (4) விகாரை தேவாலய நிர்வாக அமைப்பு

(20) ஆங்கிலேய அரசிற்கும் பொதுமக்களுக்கும் இடையில் தொடர்புகள் குறைய ஏதுவான கோல்புறூக் யாப்பின் சீர்த்திருத்தம் எது?
(1) சட்டவாக்கக்கழகத்தில் உத்தியோக சார்பற்றோரின் எண்ணிக்கையை குறைத்தல்.
(2) புதிய நீதிமன்றம் ஒன்றை ஆரம்பித்தல்.
(3) கிராமத்தில் பொது செயற்பாடுகளை மேற்கொண்ட கிராமசபையை (கம்சபா) இல்லாதொழித்தமை.
(4) பொதுமக்களின் நிலங்களை அரசு கைப்பற்றியமை.

(21) கி.பி 1848 சுதந்திர போர் தொடர்பிலான பிழையான கூற்றினை தெரிக.
(1) போரில் பங்குபற்றிய ஏராளமானோர் சாதாரண பொது மக்களாவர்.
(2) போர் வீரர்களுக்கு முறையான பயிற்சி இருக்கவில்லை.
(3) போர் கண்டியில் மட்டுமல்லாது நாட்டின் தென் பகுதியிலும் நடைபெற்றது.
(4) கண்டி வீதி தொடர்பாக ஆங்கிலேயருக்கு மலைநாட்டு வீதிகள் தொடர்பிலான போதிய அறிவு இருந்தமையால் போரை தோல்வியடையச் செய்ய முடிந்தது.

(22) பின்வரும் A முதல் D வரையிலான கூற்றுகளுள் அநகாரிக தர்மபால அவர்களுடன் தொடர்புடைய கூற்றினை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிக.
A- நாவல்கள் மூலம் ஐரோப்பிய கலாசாரத்தை விமர்சித்தமை.
B- இந்தியாவிலுள்ள பௌத்த புனித தலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.
C- பரம விஞ்ஞானார்த்த சங்கத்தை அமைத்தமை.
D- மகாபோதி சஞ்சிகைக்கு கட்டுரைகள் எழுதியமை.

(1) B யும் C யும் (2) A யும் B யும் (3) B யும் D யும் (4) A யும் D யும்

(23) சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடன் தொடர்புடைய மிகச்சரியான விடையைத் தெரிக.
(1) பெரியபுராணம் எனும் நூலை மொழிமாற்றம் செய்தமை.
(2) சைவபிரகாச வித்தியாலயத்தை நிர்மாணித்தமை.
(3) இலங்கையருக்கு அரசியல் அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை.
(4) ஆங்கிலேய அரசு பௌத்தர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை பிரயோகித்தபோது அதற்கு எதிராக குரல் கொடுத்தார்.

- **இலங்கையின் அரசியல் யாப்பு சீர்த்திருத்தங்களில் காணப்பட்ட சில அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு (24)ம் , (25)ம் இலக்க வினாக்களுக்கு விடையளிக்க.**

A- அரசுக்கழகம் உருவாக்கப்பட்டது.
B- நிர்வாக ஜனாதிபதி ஒருவரை நியமித்தல்.
C- மாகாண வாரியான பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்படல்.
D- கட்டாய இராசகாரிய முறை இல்லாதொழிக்கப்பட்டமை.
E- சர்வசன வாக்குரிமை கிடைத்தமை.
F- சட்டவாக்ககழகம், சட்டநிர்வாகக் கழகம் தோற்றுவிக்கப்பட்டமை.

(24) டொனமூர் யாப்பு சீர்த்திருத்திருத்தம் தொடர்பிலான அம்சங்கள் அடங்கிய விடை,
(1) A யும் B யும் (2) A யும் E யும் (3) D யும் E யும் (4) C யும் F உம்

(25) கோல்புறூக் சீர்த்திருத்தத்துடன் தொடர்புடைய அம்சங்களை மட்டும் உள்ளடக்கிய விடை,
(1) D யும் E யும் (2) C யும் D யும் (3) A யும் B யும் (4) D யும் F உம்

(26) ஆங்கிலேய அரசுக்கு எதிராக, அரசியல் சீர்த்திருத்தங்களை கேட்டு போராட்டம் நடாத்த முன்னோடியாக இருந்தோர்,
(1) தாழ்நாட்டு தொழிலாளர் வர்க்கத்தினர் (2) செல்வந்த வர்த்தகர் வர்க்கத்தினர்
(3) கல்வி கற்ற மத்தியதர வர்க்கத்தினர் (4) கண்டி தொழிலாளர் வர்க்கத்தினர்

(27) தெங்கு பயிர்செய்கை ஓர் ஏற்றுமதி செய்கையாக வெற்றி பெறாமைக்கு ஏதுவான காரணி,
(1) இலங்கையின் பௌதிக சூழல் தெங்கு பயிர்ச்செய்கைக்கு உகந்ததல்லாததாக இருந்தமை.
(2) தெங்கு பயிர்ச்செய்கை உரிமையாளர்களில் பெரும்பான்மையோர் இலங்கையராக இருந்தமை.
(3) உற்பத்தியின் சுமார் அரைபகுதியை தேசிய பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளல்.
(4) தெங்கு பயிர்ச்செய்கைக்கு தேவையான உழைப்பினை பெற முடியாது இருந்தமை.

(28) கி.பி 1972 அரசியல் யாப்பிற்கமைய பிரதம மந்திரியுடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான கூற்றை தெரிக.
(1) பிரதமர் பொதுத்தேர்தலினூடாக தெரிவு செய்யப்படுகிறார்.
(2) அமைச்சரவையின் தலைவர் பிரதமர் ஆவார்.
(3) பிரதமரால் அமைச்சரவை தீர்மானிக்கப்படும்.
(4) ஆளுநருக்கு இருந்த அதிகாரம் பிரதமருக்கு கிடைக்கும்.

(29)
- குற்றப்பிரேரனைகளைப் பரிசீலித்தல்.
- தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரித்தல்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தல்.
- பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் மீறப்படல் தொடர்பாக விமர்சிக்கும் அதிகாரம்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் நீதிமன்றம் எது?
(1) உச்ச நீதிமன்றம் (2) மேல் நீதிமன்றம் (3) நீதவான் நீதிமன்றம்(4) மாவட்ட நீதிமன்றம்

(30) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் முதல் கைத்தொழில் பேட்டை எங்கு அமைக்கப்பட்டது?
(1) ரத்மலான (2) பல்லேகல (3) குண்டசாலை (4) ஏக்கல

(31) தேசிய அரசு பேரவை காணப்பட்ட யுகத்தில் மக்களின் கல்விக்காக மேற்கொள்ளப்பட்ட சிறப்பான சேவை,
(1) பேராதனை பல்கலைக்கழகத்தை நிர்மாணித்தமை.
(2) விஞ்ஞானகூட , நூலக வசதிகளை அபிவிருத்தி செய்தமை.
(3) நாடு முழுவதும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்தமை.
(4) இலவசக் கல்வியை வழங்கியமை.

- **பின்வரும் A,B,C,D இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சோடியிலும் முதலாவதும் பதத்திற்கும் இரண்டாவது பதத்திற்கும் இடையிலான தொடர்பை இனங்கண்டு, இலக்கம் (32) – (35) வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

A- 1 . முடியாட்சி
2. ஸ்டேட் ஜெனரல் சபை

B – 1. தனியார் நில உரிமை
2. பொது பயிர்நிலம்

C- 1. சரஜீவோ நிகழ்வு
2. IIம் உலகப் போர்

D- 1. பிரித்தானிய குடியேற்றம்
2. சிவப்பு இந்தியர்கள்

(32) முதலாவது நிராகரிக்கப்பட்டதால் இரண்டாவது ஏற்பட்டது. இதனைக் குறிக்கும் சோடி,
(1) A (2) B (3) C (4) D

(33) முதலாவதன் பரவல் இரண்டாவதற்கு தடையாக இருந்தமை. இதனைக் குறிக்கும் சோடி,
(1) A (2) B (3) C (4) D

(34) முதலாவதன் செயலற்ற நிலை காரணமாக இரண்டாவது தோன்றியது. இதனைக் குறிக்கும் சோடி,
(1) A (2) B (3) C (4) D

(35) முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத சோடி,
(1) A (2) B (3) C (4) D

(36) இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளில் தேசியவாதத்தில் காணக்கூடிய விசேட அம்சம்,
(1) தமது நாட்டினுள் ஒரே மொழி பேச வேண்டும் என்பதாகும்.
(2) தமது நாட்டை நேசித்த அதேவேளை மற்றயை நாடுகளை உதாசீனம் செய்தனர்.
(3) வேற்று இனத்தவரை தோற்கடிப்பதற்காக போர் செய்தனர்.
(4) நாட்டில் ஒரே இனத்தவர்கள் மட்டுமே வாழ வேண்டும் என்பதனை ஏற்றுக்கொண்டனர்.

- **பின்வரும் A முதல் F வரையான தகவல்களில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு (37)ம் (38)ம் இலக்க வினாக்களுக்கு விடையளிக்க.**

A- பாசிசவாதத்தை ஐரோப்பாவில் பரப்பியமை.
B- ஜேர்மனிக்கு எதிராக போர் எழும்பியமை.
C- அவுஸ்திரியா நாட்டைச் சேர்ந்தவராக இருந்தமை.
D- கறுப்புச்சட்டை இராணுவம் அமைத்தமை.
E- செகொஸ்லாவாக்கியாவை ஆக்கிரமித்தமை.
F- ஜேர்மனியை ஒன்றிணைத்து பலமுடையதாக்கியமை.

(37) மேற்கூறப்பட்ட கூற்றகளில் அடொல்ப் ஹிட்லருடன் தொடர்புடைய தகவல்களை மட்டும் கொண்ட விடை,
(1) A யும் B யும் (2) C யும் D யும் (3) C யும் E யும் (4) D யும் F உம்

(38) பெனிட்டோ முசோலினியுடன் தொடர்புடைய தகவல்களை மட்டும் உள்ளடக்கிய விடை,
(1) D யும் E யும் (2) C யும் F உம் (3) A யும் B யும் (4) A யும் D யும்

(39) இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவ முகாம், சமவுடைமை முகாம் இரண்டிற்கும் தலைமை வகித்த நாடுகளை முறையே கொண்ட விடை,
(1) ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா (2) ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா
(3) பிரான்ஸ் , பிரித்தானியா (4) ரஷ்யா , ஜேர்மனி

(40) ‘ஐக்கிய நாடுகள்’ எனும் பதம் முதலில் யாரால் பயன்படுத்தப்பட்டது?
(1) முதலாளித்துவ முகாமில் தொடர்புடையவர்கள்.
(2) சமவுடைமை முகாமில் தொடர்புடையவர்கள்.
(3) அச்சு நாடுகளுக்கு எதிராக போரிட்டவர்கள்.
(4) நட்பு நாடுகளுக்கு எதிராக போரிட்டவர்கள்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: வரலாறு - II – HISTORY - | காலம் : 3 மணித்தியாலம் |

**கவனத்திற் கொள்க.**

- **பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்க.**
- **விடையளிக்கவேண்டிய மொத்த வினாக்கள் ஆறு.**

## பகுதி – I

(01) (அ) பின்வரும் (i) இல் தரப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க பிரதேசங்களை தரப்பட்டுள்ள இலங்கை வரைபடத்திலும், (ii) இல் தரப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க இடங்களை தரப்பட்டுள்ள உலக வரைபடத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i)

| | | | |
|---|---|---|---|
| கலாஓயா | பாகியன்கல | பேதுருமுனை | |
| சொரபொரவாவி | கோகர்ண தித்த | களுத்துறை | |
| மாணிக்க கங்கை | பொம்பரிப்பு | யோதவாவி | |
| மட்டக்களப்பு | கம்பளை | சீகிரியா | (12 புள்ளிகள்) |

(ii)


| | | | |
|---|---|---|---|
| செங்கடல் | கோவா | சிங்கப்பூர் | |
| ஹிரோஷிமா | பிரான்ஸ் | உரோம் | (06 புள்ளிகள்) |

(ஆ) (i) இல் A,B,C,D இல் தரப்பட்டுள்ள வரலாற்று தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை ஒழுங்குமுறையில் உமது விடைத்தாளில் எழுதுக.

A- கண்டி இராசதானியின் இறுதி ஆட்சியாளன்.
B- பிரான்சிய புரட்சியின்போது நாட்டை ஆட்சி செய்த அரச வம்சம்.
C- இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி.
D- பிரித்தானியர், அமெரிக்காவில் உருவாக்கிய முதல் குடியேற்றம்.

(04 புள்ளிகள்)

- **A,B இல் தரப்பட்டுள்ள உருக்களை அடிப்படையாகக் கொண்டு, தரப்பட்டுளள் வினாக்களுக்கு விடையளிக்க.**



A (04 புள்ளிகள்)

(ii) 1. A இல் காட்டப்பட்டுள்ள உருவின் பெயர் யாது?
2. இது கிடைக்கப்பெற்ற பிரதேசம் எது?
3. இது எக்கைத்தொழிலுக்குரியது?
4. இதனை உருவாக்க பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் உபகரணம் என்ன?



B (04 புள்ளிகள்)

(iii) 1. B உருவில் காட்டப்பட்டுள்ளது கட்டடம் யாது?
2. இது காணப்படும் நகரம் எது?
3. இது எந்த அமைப்பிற்கு உரித்தான கட்டடம்?
4. இங்கு செயற்படும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடு யாது?

## பகுதி - II

(02) (i) முன் வரலாற்று காலத்தில் குளங்களை மையமாகக் கொண்டு உருவான வாபி காமங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் சம்பவங்குடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை A,B,C,D எனும் ஒழுங்கில் எழுதுக.

A- முதல் திட்டமிடப்பட்ட போரில் ஈடுபடல்

B- கல்வெட்டுகளில் 'அலகபய மகரஜ' எனும் பெயரால் குறிப்பிடப்படுபவர்.

C- பத்தினி தேவாலய திறப்பு விழாவிற்கு சேர நாட்டிற்கு சென்றவர்.

D- சோழர்களை தோல்வியடையச் செய்து பொலனறுவையை தமது தலைநகராக மாற்றியவர். (04 புள்ளிகள்)

(iii) அரசுகளுக்கு முற்பட்ட காலங்களில் கிராம நிர்வாகியை தெரிந்தெடுக்கும் போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட காரணிகளுள் ஒன்றைக் குறிப்பிட்டு, கிராம நிர்வாகி ஒருவர் நிறைவேற்றவேண்டிய விடயங்கள் இரண்டை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நாட்டு மக்களின் விருப்புகளை நிறைவேற்ற அன்றைய மன்னர்கள் மேற்கொண்ட காரியங்களை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

(03) (i) கல்வெட்டுகளில் காணப்படும் பின்வரும் பதங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பதனை ஒழுங்குமுறையில் எழுதுக.

A- வெஜ்ஜசாலா B- தசகம் எத்தன் C- வசவசிக சாடக (03 புள்ளகள்)

(ii) வரலாற்றில் சமூக அமைப்பினுள்,

A- உயர்ந்த இடத்தில் இருப்பவர்-

B- தாழ்நிலையில் இருப்பவர்-

C- நேரடியாக உற்பத்தியை அனுபவிப்போர்-

D- நேரடியாக உற்பத்தியில் தொடர்புருவோர்- (04 புள்ளிகள்)

(iii) புராதன சமூகத்தில் வாழ்ந்த மக்கள் ஒற்றுமையுடனும் இணக்கப்பாடுடனும் வாழ்ந்தனர் என்பதனை இரு காரணிகளினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட மக்கள், புராதன சமூகத்தில் காணப்பட்டமையை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

(04) (i) புராதன காலத்தில் நீண்ட தூரத்தை அளக்க பயன்படுத்திய அளவீடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகளுக்குரிய விடைகளை A,B,C,D எனும் ஒழுங்கில் எழுதுக.

A- பாரிய மட்பாத்திரங்களை சுவராகக் கொண்டு அமைக்கப்பட்ட கிணறுகள்.

B- குளத்து நீரை வெளியேற்ற அமைக்கப்பட்ட அங்கம்.

C- போதியை (வெள்ளரசு) பாதுகாக்க அமைக்கப்பட்ட மனை.

D- சமனலவெவ பிரதேசத்தில் இரும்பு உருக்கு கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்பட்ட கல். (04 புள்ளிகள்)

(iii) மகா வாவிகள் நிர்மாணிக்க ஆரம்பித்த மன்னனின் பெயரை குறிப்பிட்டு, மகாவாவிகள் நிர்மாணிக்கப்பட்ட்தன் நோக்கங்கள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நாட்டு மக்களின் சுகாதாரமும் ஆரோக்கியமும் தொடர்பில் அன்றைய மன்னர்கள் மேற்கொண்ட காரியங்கள் மூன்றை உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.(06 புள்ளிகள்)

(05) (i) இலங்கையின் உலர் வலயத்தில் காணபட்ட இராசதானி தலைநகரம் ஒன்றையும் மலயரட்டையில் காணப்பட்ட இராசதானி தலைநகரங்கள் இரண்டையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கம்பளை இராச்சிய காலத்தில் ஏற்பட்ட விசேட சம்பவங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் நகராக்க காலத்தில் இந்நாட்டின் பொருளாதார முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராசதானியின் நிர்வாக செய்ற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட முறையை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

(06) (i) ஆங்கிலேயர் இந்தியாவில் அமைத்த வர்த்தக நகரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் A,B,C,D இல் தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை அடைப்புக்குறிக்கள்ளிருந்து தெரிந்து ஒழுங்கில் எழுதுக.

A- கி.பி 1795 கண்டிக்கு வந்து, இராஜாதிராஜசிங்க மன்னனை சந்தித்த ஆங்கிலேய தூதன்.

B- ஊவவெல்லஸ்ஸ போரில் போராளிகளாலேயே கொல்லப்பட்ட பதுளை அரச அதிபர்.

C- கி.பி 1818 நவம்பர் பிரகடனம் மூலம் கண்டியின் பூரண அதிகாரத்தையும் பெற்றுக்கொண்ட ஆளுநர்.

D- கி.பி 1848 கிளர்ச்சியின் பின் சவுக்கடி அளிக்கப்பட்டு, நாட்டை விட்டு துரத்தப்பட்ட ஓர் வீரன்.

( ரொபர்ட் அன்றூஸ், பிரட்ரிக் நோர்த் , கொங்காலே கொட பண்டா, டக்ளஸ் வில்சன் , ஹியுபொயிட், ரொபர்ட் சார்ம்ஸ் , ரொபர்ட் பிரௌண்றிக், வீரபுரன் அப்பு) (04 புள்ளிகள்)

(iii) ஆங்கிலேயருக்கு கண்டி இராச்சியத்தை கைப்பற்ற வேண்டும் எனும் தேவை ஏற்பட ஏதுவான காரணிகள் இரண்டினை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி 1848 கண்டியில் ஏற்பட்ட சுதந்திரப் போர் தொடர்பில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

a- போர் ஆரம்பித்த பிரதேசம் எது?

b- போருக்கு ஏதுவான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

c- போரில் தோல்வியடைய ஏதுவான காரணிகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(07) (i) இலங்கைக்கு அரசியல் யாப்பு ஒன்றை கேட்டு ஆங்கிலேய அரசிற்கு கோரிக்கை விடுத்த சங்கங்கள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) டொனமூர் சீர்த்திருத்த யாப்பின் மூலம் வெளியிடப்பட்ட கோரிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) மகாவலி அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் இரண்டினை எழுதி, விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் விவசாய அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

A- ஆரம்பித்த நபர் யார்?

B- சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

C- விவசாயக் குடியேற்றங்களை அமைத்து நடாத்துவதில் அரசு முகங்கொடுக்க வேண்டிய சவால்கள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி – III

(08) (i) ஐரோப்பியமறுமலர்ச்சி காரணமாக ஏற்பட்ட அறிவு வளர்ச்சியின் விளைவாக கத்தோலிக்கத் திருச்சபையை விமர்சித்தவர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் A,B,C,D இல் தரப்பட்டுள்ள பிரதேசங்களை கண்டுபிடித்த நாடுகாண் பயணிகளைப் பெயரிடுக.

A- நன்நம்பிக்கை முனை

B- மேற்கிந்திய தீவுகள்

C- கனடா

D- பிலிப்பைன் (04 புள்ளிகள்)

(iii)a. மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய சிற்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

b. மறுமலர்ச்சி காலத்தில் கலைத்துறையில் காணப்பட்ட விசேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையில் பல்வேறு துறைகளில் மறுமலர்ச்சி செல்வாக்கு செலுத்தியது. அரசியல், பொருளாதார துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

(09) (i) A- கி.பி 1870இல் பிரான்சை தோல்வியடையச் செய்து ஜேர்மனியின் பிரிஸ்மார்க்கினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சிற்குரிய பிரதேசங்கள் இரண்டையும்,

B- அமெரிக்க சுதந்திர குடியேற்றம் முதலாம் உலக மகா யுத்தத்தில் பங்குபற்றாமைக்கு ஏதுவான ஜேர்மானியர்களால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலின் பெயரையும் A,B ஒழுங்கில் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் தகவல்களுக்குரிய விடைகளை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்து எழுதுக.

A- சர்வதேச சங்கம் அமைக்க முனைப்புடன் செயற்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி.

B- கி.பி 1936 முசோலினியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆபிரிக்க நாடு.


C- சுவிஸ் கால்வாயை மக்கள் வசமாக்கிய மிசிர் ஜனாதிபதி.

D- அத்திலாந்திக் உடன்படிக்கையை கைச்சாத்திட்ட பிரித்தானிய பிரதமர்.

(அபிசினினியா, லொயிட் ஜோர்ஜ், மார்ஷல் டிடோ, அப்துல் கமால் நசார், பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், எரிதிரியா, வின்ஸ்டன் சர்ச்சில், வூட்ரோ வில்சன்) (04 புள்ளிகள்)

(iii) முதலாம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள் இரண்டை விளக்குக.(05 புள்ளிகள்)

(iv) ஐக்கிய நாடுகள் சபை தோன்றுவதற்கான காரணங்கள் இரண்டை எழுதி, உலக சமாதானத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)


N


Africa
Indian Ocean
N